# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## அரையாண்டு -மதிப்பீட்டுத் தாள்

## 2020 - 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:............................................................ நேரம்: 150 மணித்துளிகள்

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உயிர் எழுத்துகள் ______________ .

( முப்பது, பன்னிரண்டு, பதினெட்டு)

2. ஆடற்குல ஆண்கள் ______________ .

( கூத்தர், விறலியர், பாடினி )

3. ஆமை நிலத்திலும் நீரிலும் வாழும். ________ ஓர் ஈருடக உயிரி.

( அவை , உது, அது )

4. வயலும் வயல் சார்ந்த இடமும் ______________.

( மருதம், நெய்தல், முல்லை )

5. ஆடைகளை நெய்பவர் ______________ .

( குயவர், உழவர், நெசவாளர் )

6. சிறுவனுக்குச் சிறுமி போல, தந்தைக்குத் ______________ .

( தாய், பாட்டி, தோழி)

7. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் ______________ .

( தாழ்வு, உயர்வு, வாழ்வு )

8. 400 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .

( நானூறு, நாநூறு , நாணூறு )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

9. மாடுகள் கட்டுமிடம் ______________ .

( தொழுவம், பந்தி, குகை )

10. ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல் ______________ .

( பன்மை, வேற்றுமை, உண்மை )

11. ______________ மரத்தைக் கற்பகதரு என அழைப்பர்.

( பாலை , தென்னை, பனை )

12. இரை என்பது ______________ .

( உணவு, உடை, அணி )

13. முருங்கை + காய் = ______________ .

( முருங்கக்காய், முருங்கைக்காய், முருங்கய்க்காய் )

14. நெல்வயல்கள் ______________ எனக் காட்சி அளித்தன.

( பச்சைப்பசேல், கன்னங்கரேல், செக்கச்செவேல் )

15. பனை ______________ அழகுப்பொருட்கள் செய்வர்.

( ஓளையில், ஓலையில், ஓழையில் )

16. இளங்கோவடிகள் ______________ நாட்டைச் சேர்ந்தவர்.

( சேர, சோழ, பாண்டிய )

TEDC

17. மக்கள் நேற்று அங்காடியில் பல பொருட்களை __________ .

( வாங்குகின்றனர் , வாங்கினர் , வாங்குவர் )

18. வயலை உழுவதற்குப் பயன்படும் விலங்கு __________ .

( காளை, கழுதை, ஒட்டகம் )

19. ஆறுமுகநாவலர் பிறந்த இடம் __________ .

( நல்லூர், சுன்னாகம், நவாலி )

20. குறிஞ்சி நில மக்கள் __________ .

( வேளாளர், குறவர், ஆயர் )

21. சிற்றுயிரிகளில் ஒன்று __________ .

( மயில், கழுகு, தேனீ )

22. நீ பள்ளிக்குச் சென்றாய். __________ பள்ளிக்குச் சென்றீர்கள்.

( நீர், நீங்கள், நீ )

TEDC

23. நல்வழி என்ற நூலை எழுதியவர் __________ .

( ஔவையார், திருவள்ளுவர், கபிலர் )

24. களைவது என்ற சொல்லின் பொருள் __________ .

( உடுப்பது, சேர்ப்பது, நீக்குவது )

25. அரங்கேற்றுகாதை இடம்பெற்ற நூல் ________________ .

( மணிமேகலை, சிலப்பதிகாரம், குண்டலகேசி )

26. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல் ________________ .

( நூலகம், மன்னார், திருகோணமலை )

27. பொங்கலன்று புதுப்பானைக்கு ________ இலைகள் கட்டுவர்.

( பலா, இஞ்சி, வாழை )

28. வாழைக்கன்று ________________ என வளர்ந்தது.

( படபட, கமகம, மதமத )

29. **நொடி:**

எண்ணெய் இல்லை; திரியும் இல்லை; ஏற்றி வைக்க ஆளுமில்லை; ஆனாலும் அணையாது வெளிச்சம் தரும் அது ______________ .

( குத்துவிளக்கு, கதிரவன், மெழுகுதிரி )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

30. காகங்கள் ‘கா கா’ என்று ________________ .

( கரைகின்றன, கூவுகின்றன, கொக்கரிக்கின்றன )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. எழிலன் பட்டத்தில் ____________________ க் கட்டினான்.

( நூல் )

2. சிறுவர்கள் ____________________ த் தீனி போட்டனர்.

( புறா)

3. தேன்மொழி ____________________ படம் வரைந்தாள்.

( எழுதுகோல் )

4. கண்ணன் ____________________ கடற்கரைக்குச் சென்றான்.

( நாய் )

5. விளையாட்டுகள் ____________________ வளர்க்கும்.

( ஒற்றுமை )

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ''கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை'' எனும் பாடல் எதைப்பற்றிக் கூறுகிறது?

___

2. கல்லாலான சங்கிலிகள் காணப்படும் கோவில் எது?

___

3. ஆனிரை மேய்த்தல் எந்நிலத்துக்குரிய தொழில்?

___

4. பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே உள்ளன?

___

5. இளங்கோவடிகளின் தந்தையின் பெயர் என்ன?

___

6. நம்முன்னோர் கலைகளை எத்தனையாக வகுத்துள்ளனர்?

___

7. உலகத்தில் அழியாது நிலைத்து இருப்பது எது என்று வள்ளுவர் கூறுகின்றார்?

___

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து கவிதையை நிரப்புக.**

## விடியல்

| | | |
|---|---|---|
| இருளும் | மெல்ல | கதிரவன் |
| மக்களும் | சேவல் | |

வட்டமான கதிரவன்

வாழ்வு தரும் ______________

எட்டி வான வீதியில்

எழுந்து ______________ வருகிறான்

கரிய ______________ விலகுது

கோழி ______________ கூவின

விடியல் கண்டு ______________

விழித்து எழுந்து நின்றனர்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| யாழை | பெற்றது | வீணையும் |
| அம்பு | முதன்மை | |

மிகப் பழங்காலந் தொட்டே தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்துவந்த இசைக்கருவிகளில் யாழ் ____________ பெற்றது. இது நரம்புக்கருவி வகையைச் சேர்ந்தது. வில்லில் நாணை ஏற்றி ____________ எய்தபோது இசையொலி எழுந்தது. அதனைக் கொண்டு வில்லின் வடிவில் ____________ ப் படைத்தனர். பண்டைய யாழ் பிற்காலத்தில் உருமாறி வீணையாயிற்று. யாழிசை தமிழ் மக்களிடையே பெருமதிப்பைப் ____________ . யாழ் இசைப்போரைத் தமிழர் பாணர் என்று அழைத்தனர். இன்று இசைநிகழ்ச்சிகளின் போது வயலினும் ____________ வகிக்கும் இடத்தை அன்று யாழ் வகித்தது.

TEDC

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

ஒவ்வொரு நாட்டிற்கும் தேசியக்கொடி உண்டு. தமிழீழத்தின் தேசியக்கொடி புலிக்கொடியாகும். இக்கொடியில் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்கள் உள்ளன. இதில் புலி பொறிக்கப்பட்டிருக்கும். தேசியக்கொடி முதன் முதலாக 1990 ஆம் ஆண்டு ஏற்றிவைக்கப்பட்டது. தேசியக்கொடியை வணங்குவது தாய்நாட்டை வணங்குவதற்கு ஒப்பாகும். தேசியக்கொடி ஏற்றும்போது நாம் எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும். கொடியேற்றும்போது கொடி வணக்கப்பாடல் பாடப்படும். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர் தேசிய நிகழ்வுகளின்போது தமது தேசியக்கொடியை ஏற்றி வணக்கம் செய்கின்றனர்.

1. தமிழீழத்தின் தேசியக்கொடி எது?

_______________________________________________

2. தேசியக்கொடியில் உள்ள நிறங்கள் எவை?

_______________________________________________

_______________________________________________

3. தேசியக்கொடி முதன் முதலாக எப்போது ஏற்றிவைக்கப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

4. தேசியக்கொடியை வணங்குவது எதற்கு ஒப்பாகும்?

_______________________________________________

5. எப்போது கொடி வணக்கப்பாடல் பாடப்படும்?

_______________________________________________

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

7) **தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

1. நான் எனது பெற்றோர் சொற்கேட்டு நடப்பேன்.

_______________________________________ .

2. தூயவன் தமிழ்ப்பள்ளிக்குச் செல்கின்றான்.

_______________________________________ .

3. நாங்கள் நாளும் பழங்கள் உண்ண வேண்டும்.

_______________________________________ .

4. நேற்று நல்ல மழை பெய்தது.

_______________________________________ .

5. தமிழர் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர்.

_______________________________________ .

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் கலைத்திறன்
- ✸ இளங்கோவடிகள்
- ✸ காலங்கள்
    - ➢ காலங்களின் பெயர்கள்
    - ➢ காலங்களில் ஏற்படும் மாற்றங்கள்
    - ➢ இக்காலங்களில் விளையாடும் விளையாட்டுகள்
    - ➢ நீர் விரும்பும் காலம்

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை TEDC

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC